செ.வெ.எண்-47 நாள்-25.08.2021

**அரியலூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படுவதை முன்னிட்டு பள்ளி தலைமையாசிரியர்களுடனான கோவிட் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**அதன் விபரம் பின் வருமாறு:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி செப்டம்பர் முதல் தேதியிலிருந்து பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படுவதை முன்னிட்டு, அரியலூர், திருமானூர் மற்றும் செந்துறை ஒன்றியங்களுக்குட்ப்பட்ட அரசு, அரசு உதவிப்பெறும், சுயநிதி மற்றும் மெட்ரிக் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளை சார்ந்த 97 பள்ளி தலைமையாசிரியர்களுடனான கோவிட் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் 24.08.2021 அன்று நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரவித்தாவது:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வருகின்ற செப்டம்பர் 1ஆம் தேதி முதல் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை திறக்க உத்தரவிட்டதன் அடிப்படையில், அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும். மேலும், அரசு தெரிவித்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் கடைபிடிக்க வேண்டும். மேலும் அனைத்து பள்ளிகளிலும் நாற்காலிகள், விளையாட்டு கருவிகள், ஆய்வகங்களை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யவும், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி இரண்டு தவணைகள் செலுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும் ஒவ்வொரு வகுப்பறை நுழைவு வாயிலிலும் கிருமி நாசினி கொண்டு மாணவ, மாணவிகள் கைகளை சுத்தம் செய்ய சுகாதாரத்துறையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். பள்ளி நாட்களில் கொரோனா அறிகுறி தென்படும் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு பரிசோதனை மேற்கொண்டு, உரிய சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆசிரியர்களிடம் தெரிவித்தார்கள்.

இன்று (25.08.2021) ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், தா.பழூர் ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப்பெறும், சுயநிதி, மெட்ரிக உயர், மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுடனான கோவிட் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திருமதி.கீதாராணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.எம்.இராமன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.அம்பிகாபதி, திரு.சிவராமன், திரு.ஆனந்தன், பள்ளித்துணை ஆய்வாளர் திரு.பழனிசாமி மற்றும் தலைமையாசிரியர்கள், சுகாதாரத்துறை அலுவலர் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**